711

# முத்துச் சுடர்

(சிறுகதைகள்)

PUBLICATIONS OF ... 1 NOV 1966 PUBLIC (INFN & PUBL.CITY) DEPT.

ஆசிரியர்:
சேந்தை-இராமமாறன்.

விலை 20 காசுகள்.

MADRAS RECORD OFFICE MADRAS

வெளியீடு:
பாரதி நிலையம்,
அரிமளம்.

# முத்துச் சுடர்

ஒரு நாள் மாலை இரவு சுமார் 7-30 மணி இருக்கும் காற்று வாங்க போகலாம் என்ற எண்ணத்துடன் முத்து புறப்பட்டான். அவன் சென்ற நேரத்தில் குளிர்ந்த தென்றல், மலர்களின் நறுமணம், நிலவின் ஒளி, அனைத்தும் ஒருங்கே சூழ்ந்து நின்று தென்றலை முத்துவுக்கு வாரி வாரி வழங்கிக் கொண்டிருந்தன. நிலவினைச் சுற்றி ஆயிரக் கணக்கான விண்மீன்கள் ஒன்று சேர்ந்து ஒளியைத் தருவதும் மலர்களில் இருக்கும் மதுவை உறிஞ்ச எண்ணற்ற வண்டினங்கள் இசை முழங்கிக் கொண்டிருந்தன. அந்த சமயத்தில் காற்று வாங்க சென்ற முத்துவுக்கு அவனை அறியாம லேயே ஒரு மகிழ்ச்சி தோன்றுகிறது. மகிழ்ச்சியின் விளைவால் பாடவும் தொடங்குகிறான்.

எங்கிருந்தாலும் தமிழன் வாழ்க!
அவன் பாச உணர்ச்சியும் வாழ்க!
வள்ளுவன் பாரதி இளங்கோ அனைவருக்கும்
தமிழன் புகழ் வாழ்கவே. (உயிர் கொடுத்து)
தாய்மொழிக்கு தன்னுயிரை நீத்த
சின்னச்சாமியின் புகழ் வாழ்கவே!
வாழ்க வாழ்கவே! தமிழ் வாழ்க வாழ்கவே!!

என்று இசை முழங்க பாடலைப் பாடிக் கொண்டு செல்கிறான். அந்த இருளிலே தரையில் மின்வெட்டுப் போன்று பளிச்சென்றது ஒளி. ஏதோ கிடப்பது போலல்லவா இருக்கிறது. என்னவென்று தான் பார்ப் போமே என்று முத்து தரையில் குனிந்து பார்க்க

அது பெண்கள் கழுத்தில் அணியும் நெக்லஸ். அதைப் பார்த்ததும் ஒரே திகைப்பு. பேசாமல் பையில் போட்டுக் கொண்டு வீடு திரும்புகின்றான். மறுநாள் காலை முத்து கல்லூரிக்கு புறப்பட்டுச் செல்கிறான். அங்கு மாணவர் இலக்கிய மன்ற ஆண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக ஆயிரக் கணக்கான மாணவ மாணவியர் ஒரே அமைதியாய் அமர்ந்து இருந்தனர். இறைவணக்கம் தொடங்கி தலைவர் உரை :—

மதிப்பிற்குரிய ஆசிரியப் பெருந்தகையீரே. என் பிரியமுள்ள உடன் பிறவா சகோதர சகோதரிகளே இவ்விழாவிலே பங்கு கொள்வதற்காகக் காத்துக் கொண்டிருக்கும் உங்கள் அனைவருக்கும் எனது நன்றி. இன்று நடைபெற இருக்கின்ற மாணவர் இலக்கிய மன்ற ஆண்டு விழாவுக்கு என்னை தலைமை தாங்கும் படி கேட்டுக் கொண்ட நமது கல்லூரி முதல்வருக்கு எனது அன்பு கலந்த வணக்கத்தை உரித்தாக்கி "தனித்தமிழ்" என்ற தலைப்பிலே பேசும்படி நமது கல்லூரியின் மாணவராகிய முத்துவைப் பேச அழைக்கின்றேன்.

[மாணவ மாணவரின் கரோகசம் விண்ணை யெட்டியது. முத்து மேடை முன்பு வருகிறான்.]

முத்து :— காலையிலே உதயமாகி மாலையிலே வந்து, மந்தாரம் போல மறைகின்ற ஞாயிறைப் போல அமர்ந்திருக்கின்ற திங்களானது இரவுகளிலே ஞாயிருக்கு ஒப்பாக ஒளிந்து இருளினைப் போக்குவதைப் போல, அமர்ந்திருக்கின்ற ஆசிரியப் பெருந்தகையீர் களுக்கும், திங்களைச் சூழ்ந்து ஆயிரக்கணக்கான

விண்மீன்கள் ஒன்று சேர்ந்து திங்களுக்கு ஒரு சிறு ஒளி தருவதைப் போல் அமர்ந்திருக்கின்ற எனது உடன் பிறவா சகோதர சகோதரிகளுக்கும், எனது முதற்கண் நன்றி உரித்தாக்குகிறேன். இன்று நடை பெற்றுக் கொண்டிருக்கின்ற மாணவர் மன்ற ஆண்டு விழாவில் எனக்கு பேச வாய்ப்பளித்த எல்லா ஆசிரியர் களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

இனி "தனித்தமிழ்" என்ற தலைப்பிலே உங்களி டத்தில் ஓரிரு உதாரணங்களால் விளக்கி எனது இடம் சென்று அமருகின்றேன். தமிழானது எந்த ஒரு மொழியிலேயும் கலப்படமில்லாமல் தமிழின் உயிர் மெய் எதுத்துக்களைக் கொண்டு பேசப்படுவதோ எழுதப்படுவதோ தனித்தமிழ் எனப்படும். அப்படியல் லாமல் சோறு என்று நாம் இனிய தமிழில் சொல் வதற்கு வெட்கப்பட்டு சாதம் என்று சொல்கின்றோம். அதைப்போலவே அபேட்சகர் என்று நம் வாயினால் சொல்கின்றோம். இனியாவது திருந்தி வேட்பாளர் என்று சொல்லலாமல்லவா! இதுபோன்று பல்லாயிரக் கணக்கான சொற்கள் தமிழகத்திலே உலவி நம் தாயான தமிழின் தரத்தை குறைத்து வருகின்றன. இனிமேலாவது அன்பர்களாகிய உங்களை எனது இரு கைகூப்பிக் கேட்டுக் கொள்கிறேன் தமிழ் மொழி தேனினும் இனியது. அதை பிற மொழிகளைக் கலக் காமல் அதைச் சுவைத்து மகிழுங்கள் எனக் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் எனது உரையை முடிக்கி றேன் வணக்கம்.

தலைவர் முடிவுரை :— இவ்விழாவிற்கு வந்து விழாவைச் சிறப்பித்துத் தந்த ஆசிரியர்களுக்கும் மாணவ மாணவியருக்கும் மற்றுமுள்ள பொது மக்களுக்கும் இலக்கிய மன்றத்தின் சார்பாய் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டு வாழ்த்து முழங்க விழா இனிது முடிவுறும்.

[நாட்டு வாழ்த்து பாடப்பட்டு விழா முடிவுற்று கல்லூரி விடுமுறை துவங்கிவிட்டதால் அவரவர் தம் நண்பர்களிடம் தங்கள் தங்கள் முகவரிகளைக் கொடுத்து அவர்கள் முகவரிகளை வாங்கிக் கொண்டு பிரியா விடை பெற்றுச் செல்லலாயினர்.]

கல்லூரியிலிருந்து விடைபெற்றுச் சென்ற முத்து தன் இல்லத்தில் சென்று உடை மாற்றிச் சென்று இரவு உணவு உண்டான். உணவு உண்ணும் போது நேற்றைய இரவு நடந்தவை நினைவுக்கு வந்ததும் அவசர அவசரமாய் உணவு உண்டுவிட்டு நேற்று சென்ற காட்டிற்கு காற்றுவாங்க புறப்பட்டான் முத்து. சென்று கொண்டே யிருந்தான். நேற்று நெக்லஸ் எடுத்த இடம் வந்ததும் அந்த இடத்திற்கு சிறிது தூரத்தில் சிவப்பு, பச்சை போன்று பல வண்ணங்கள் அவனைப் பார்த்துச் சிரித்தது ஒரு திருகாணி யில்லாத காதணி ஒன்று. அதை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டு திகைப்புடன் ஓட்டமும் நடையுமாய் தன் இல்லம் வந்து சேர்ந்தான். அவன் மனம் எண்ணியது நேற்று என்னவென்றால் ஒரு நெக்லஸ் கிடந்தது எடுத்தோம். இன்று என்ன வென்றால் அதே இடத்தில் ஒரு காதணியை எடுத்துள்ளோம். இதை ஊன்றிப் பார்க்கும் போது இதில்

ஏதோ மர்மம் இருப்பதாக அல்லவா தோன்று கின்றது? இவை யாரோ ஒரு மணமாகாத பெண்ணின் பொருள்களாக அல்லவா தோன்றுகின்றது. இருக் கட்டும் இதை எப்படியாவது இந்த விடுமுறை முடி வதற்குள் கண்டுபிடிக்க வேண்டும், என்று பலவாறு முத்து எண்ணி மனதைக் குழப்பிக் கொண்டான் மனச்சோர்வு நீங்கி புத்துணர்சி பெற அருகிலுள்ள சி. என். ஏ. தேனீர் நிலையத்திற்குப் போய் சூடாய் ஒரு தேநீர் அருந்தி வீட்டில் சென்று துயில் கொண்டான். அன்று முதல் பல நாள் வரை இரவு பகல் பாராது அந்தக் காட்டையே அலசியும் ஒரு பலனும் ஏற்படவே யில்லை. அன்றொருநாள் நல்ல மாலை நேரத்தில் அந்தக் காட்டின் ஒரு மூலையிலிருந்து ஊர் செல்லத் திரும்பிக் கொண்டிருக்கும் முத்து நினைக்கிறான். நாம் இவ்வளவு நாள் சுற்றியும் ஒன்றும் பலன் கிடைக்க வில்லையே. இன்று நாம் ஊர் போய்ச் சேருவதற்குள் ஒரு துப்பும் கிடைக்க வில்லையானால் பேசாமல் நாளைக் காலை நம் ஊர் போலீஸ் ஸ்டேஷனில் சென்று இந்த நகைகளை ஒப்படைத்து பேசாமல் ஒரு ரிப்போட் எழுதிக் கொடுத்து விட்டு நாம் பாடு ஹாய்யாய் இருக்க வேண்டும். ஸ் அப்பா என்று முத்து சொல்லி வாய் மூடுவதற்குள் சொல்லி வைத்தார்ப் போல் ஐயரோ, அப்பா, அம்மா, என்று கொலை செய்யப்பட்டவர் போல் யாரோ ஒரு பெண் கதறுவது முத்துவின் காதில் விழுந்ததும் ஓசை வந்த திக்கில் ஓடிக்கொண்டே இருந்தான். சுமார் ஒரு மைல் ஓடியிருப்பான் களைத்து ஒரு மரத்தடியில் அமர்ந்தான். அவன் இருந்த இடத் திற்கு சமீபத்தில் யாரோ பேச்சுக் குரல் கேட்டதும் அவன் புதர்களை விலக்கிக் கொண்டு மரங்களைக்

கடந்து அந்த அடர்ந்த புதர்களுக்கு இடையில் பார்த்தான். ' அங்கே

ஒரு பெண்ணை மரத்தில் கட்டிவைத்து அப் பெண்ணைச் சுற்றி மூன்று முரடர்கள் நின்று அவளை அடித்து துன்பப் படுத்திக் கொண்டிருந்தனர். இக் காட்சியைக் கண்ட முத்து நல்ல விளைந்த தேக்கு மரமாகப் பார்த்து நல்ல உருண்டு திரண்ட ஒரு கிளை முறித்து அவர்கள் மேல் பாய்ந்து தாக்க ஆரம்பித் தான். அவனது திடீர் தாக்குதலைக் கண்ட அம்முரடர் கள் அதை முறியடிக்க இயலாது நன்ருய் உதைபட்டு சிதறி ஓடினர். பிறகு குச்சியை எரிந்து விட்டு நெற்றி வியர்வையை கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு துவண்டு விழும் அப் பூங்கொடியாளின் இடையில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டு அவளை விடுவித்தான் முத்து. பிறகு முத்து அவளைப் பார்த்து நீங்கள் இவர்களுக்கு என்ன குற்றம் செய்தீர்கள்? ஏன் இவர்கள் இப்படி உங்களை துன்புறுத்தினர்கள்? என்று வினவ. அதற்கு அவள் என்னை ஒன்றும் கேட்காதீர்கள். நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. நீங்கள் என்னை காப்பாற்றியமைக்கு நன்றி தான் வருகிறேன், என்று கூறி வேகமாக செல்கிருள் அந்தக்கன்னி. முத்து ஒன்றும் புரியாது திகைத்து தயவு செய்து உங்கள் பெயரையாவது தெரிந்து கொள்ளலாமா? அதற்கு அவள் ம்......என் பெயரா? ஆம் என் பெயர் சுந்தரிதான். என்று கூறி வேகமாய் அந்தக் கானகத்திலே சென்று மறைகிருள். செல்லும் போதே தன் மனதிற்குள் என் உயிர் காப்பாற்றிய வரிடம் என் பெயரைக் கூட சொல்லாமல் வேறு

பெயரை மாற்றிச் சொல்லிவிட்டேன். அதுவும் ஒரு வகையில் சரிதான். ஏனெனில் அந்த முரடர்கள் ஏன் மற்றவர்களிடம் உன்னைப் பற்றிய விவரங்களைச் சொன்னாய் என்று கேட்டால், சரி இனிமேல் நம்மைக் காப்பாற்றியவரைப் பொருத்த வரை நாம் சுந்தரி தான், என்று சுந்தரி எண்ணிக் கொண்டே இரண்டு மைலில் உள்ள ஒரு சிறு கிராமத்தில் தன் வீட்டின் முன்பு வர அங்கு அவளின் வயதான தாய் வாடியாத்தா இப்படி வயதுவந்த பொண்ணு ஊர் சுற்றலாமா? உன் அப்பன் போன பின்பு ரெம்ப நீ சங்கம், சாவடி என்று திரியீரியே இது உனக்கே நல்லா யிருக்கா? என் தம்பியைக் கட்டிக் கொள் என்றால் கேட்டால் தானே. அந்தப் பாழும் மனிசன் தான் தேடிய சொத்தெல்லாம் பெண்டு பிள்ளைக்கு இல்லாமல் எங்கே எப்படிப் போயிற்று என்ற விவரமே தெரியாதபடி செய்துட்டார்? போய் பானையிலே சோறுவைத்திருக்கின்றேன். கொட்டிக் கொண்டு படுத்து தூங்கு என்று மூச்சு விடாமல் பேசினாள் சுந்தரியின் தாய் மீனாட்சியம்மா. சுந்தரி சாப்பிட்ட பின் தன் படுக்கைக்குச் சென்று இரவு நடந்த களைப்பினால் நன்றாய் தூங்கினாள். அவள் தாய் வந்து அவளை ஏண்டி அறியவில்லை? பொழுது புலர்ந்தது இவ்வளவு நேரமாகியும் உனக்கு எழமனமில்லையா? என்ன? எழுந்திரு என்று மீனாட்சியம்மாள் அவள் கழுத்தைத் தட்டி எழுப்ப அப்பொழுது அவள் கழுத்தில் நெக்லஸ் காணாமல் போகவே ஜன்னலைத் திறந்து கழுத்திலும், காதிலும் ஒன்றுமில்லாது கண்டு ஏண்டி தூங்கப் போகுமுன் நகைகளைக் கழட்டிவைத்து விட்டாயா? மூளியாய் இருக்கிறது. அதை எடுத்துப் போட்டுக் கொண்டு

போய் பல்த்தேய் என்று கூறினுள். அவள் கழுத்தை யும், காதையும் பார்த்து ஒரு காதில் திருகாணி மட்டும் இருப்பதைக் கொண்டு ஒரு திருகாணியில்லாத தோட் டையும். நெக்லஸ்ஸையும் காணுமல் போகவே அவள் நன்ருய் நினைந்துப் பார்த்தாள்.

ஒருவேளை நாம் அந்த முரடர்களிடம் அகப்படடுக் கொள்ளும் போது கீழே தவறி விழுந்திருக்கலாமல்ல வா? இருக்கலாம். பல் தேய்க்கும் சாக்கில் அவள். அந்தக் காட்டிற்குள் ஓட்டமும் நடையுமாய் போய்ச் சேர்ந்தாள். அங்கே அவள் பல இடங்களில் தேடியும் அப்பொருள்கள் அகப்படவேயில்லை. ஏ மா ற் ற த் துடனும் சோர்வுடனும் திரும்பிக் கொண்டிருக்கையில் முத்துவைச் சந்தித்தாள். என்னாங்க என் நெக்லஸ் சையும், தோட்டையும் காணுமுங்க. என்ன நகை யைக் காணுமா? நகையைக் காணுமென்ருல் போலி ஸில் புகார் செய்தாயா? என்று ஒன்றும் தெரியாதவன் போல் நடித்தான் முத்து. என்ன போலிஸா போ.... லீ .....ஸ் என்ற வார்த்தையைக் கேட்டதும் சுந்தரி அதிர்ச்சியடைந்து பின் சுதாரித்துக் கொண்டாள். என்ன சுந்தரி உன் உடம்புக்கு? போலீஸ் என்ற சொல்லைக் கேட்டதும் ஏதோ அச்சப் படுகிருய் போலிருக்கிறதே! சொல் சுந்தரி. சொல். நானிருக் கிறேன். ஏன் பயப்படுகிருய்? என்னிடம் என்ன மறைக்க வேண்டும்? சும்மா சொல் சுந்தரி என்னுல் ஆன உதவியைச் செய்கிறேன் என்று கூறினுன் முத்து. சுந்தரி ம்..... போலீஸ்னு எனக்கா பயம். இல்லே போலீஸைக் கண்டு நான் பயப்படவில்லை என்று ஏதே தேதோ கூறிவிட்டு என்னவோ? என்ன சுந்தரி இந்த

முகத்தில் புன் நகையிருக்க பொன் நகையேன்? என்று முத்து கூற சுந்தரியின் முகம் நாணத்தால் சிவக்க அதைத் தன் இரு கைகளினுலும் மூடிக் கொண்டு அவள் வேகமாய் ஓடினுள். இடையே அவள் சேலைத் தலைப்பு அவளுடன் ஒத்துழைக்க மறுத்து பின்னிவிட அவள் கீழே விழுந்து அவளின் கணுக்காலில் ஒரு கூரிய கல் பதம் பார்த்தது. அவளின் பொன்நிறக் கால்களெல்லாம் செந்நிறமாய்க் காட்சியளித்தன. பின்னுல் முத்து ஒடிவந்து அவளின் காலுக்குக் கட்டுப்போட்டு நன்ருய் இருக முடிச்சுப் போட்டான். அப்பொழுது அந்த இரு ஜோடிக் கண் களும் ஒரே சமயத்தில் சந்தித்தன. அந்த நேரத்தில் இருவரின் உடலிலும் ஒரே சமயத்தில் மின்சார சக்தி போல் தாக்கின. அவன் கட்டிப் பிடிக்க கைகளை நீட்ட எட்டித் தள்ளி ஓடிவிட்டாள் அப்பெண். அவன் நாளை எங்கு? என்று வினவ அவள் நாளை இதே நேரத்தில் இங்கு என்று கூறி விட்டு சேலைத் தலைப் பைத் தூக்கி முடிக்கொண்டு அந்த அடர்ந்த காட்டிற் குள் ஓடி மறைந்தாள் அம் மாய சுந்தரி.

இந்த சுந்தரியிடம் ஒன்றுமே தெரிந்து கொள்ள முடியவில்லையே. பாவம் அழகான பெண். நல்ல குணம். என்னவோ யார் செய்த குற்றத்திற்கோ யாரோ துன்பமடைகின்ருர்களே. சரி நாளை என்னவும் முடிகிறதா? பார்ப்போம் என்று பலவாறு எண்ணிக் கொண்டே தன் வீடு வந்து சேருகிருன் முத்து.

மறு நாள் :— முத்து அக் காட்டினுள் சுந்தரிக் காக காத்திருக்க சுந்தரி வருகிருள். சுந்தரி உனக்காக எவ்வளவு நேரம் தெரியுமா காத்திருக்கிறேன்? ம்......

எவ்வளவு நேரமாம்? நீதான் சொல்லேன். எனக்கென்ன ஜோஸ்யமா தெரியும்? ஆமாம் ஒன்று கேட்பேன். சொல்ல மறுக்க மாட்டாயே? என்ன அது? உனது தந்தை என்ன செய்கிறார்? ஆ!! எனது தந்தையா! இவ்வளவும் உங்களுக்குத் தெரிந்த பின்பும் இனிமேல் மறைப்பதில் பலன் இல்லை. இதைக்கேட்ட பின்பாவது இந்தக்குப்பையில் கிடந்த கோமேதகத்தை ஏற்றுக்கொள்வீர்களா? கேளுங்கள் சொல்கிறேன்.

எனது தந்தையான காத்தவராயனின் பெயரைக் கேட்டால் அழுதபிள்ளை வாய்மூடும். அவர் கை வைக்காத இரும்புப் பெட்டியும் உண்டா? அவரை யாராவது பார்த்துவிட்டால்! அவரின் இடுப்பில் என்னேரமும் இருக்கும் பளபளக்கும் பீச்சுவா அவர்களின் நெஞ்சை ஆழம் பார்க்க தயங்காது. இப்பேர்பட்டவரின் கூட்டாளியாக வந்து சேர்ந்தனர் மூவர். அவர்களைத்தான் தாங்கள் அன்று தாக்கி விரட்டியது. இவர்கள் நால்வருமாக சேர்ந்து பல கொள்ளைகள செய்து நிறையப் பொருள் சேர்த்து மூவரும் பங்கிட்டுக் கொண்டனர். அவர்கள் எல்லோருக்கும், எனது தந்தைக்கும் சமமான பங்கே கிடைத்தது. ஆனல் அம்மூவரும் சூதாட்டம், குடி, மாது முதலியவற்றில் செலவழித்து விட்டனர். ஆனல் எனது தந்தையே எனக்கும் எனது தாய்க்கும் பிற்காலத்தில் வேண்டுமே எனக் கருதி அப்பொருள்களை ஒரு இடத்தில் போட்டு புதைத்து, அப்புதையல் பற்றிய குறிப்புக்களை எங்கோ மறைத்து விட்டார். பிறகு அவர் விஷ சுரத்தால் இறந்து விட்டார். அக்குறிப்புக்களை கேட்டுத்தான்

என்னை மிரட்டுகிறுர்கள் அப்பாவிகள். அத்தான் என்னை மன்னிப்பீர்களா? உங்களைப் பார்த்துப் பயந்து எனது உண்மைப் பெயரரைக் கூறக்கூட அறுகதை யற்றவளாகி விட்டேன் அத்தான். என்பெயர் சுடர் அத்தான் சுடர். வா! சுடர் நேரமாகி விட்டது உனது வீட்டில் கொண்டு போய்விட்டு விடுகிறேன் என்ருன் முத்து. (பிறகு அவளை அவள் வீட்டில் கொண்டு போய் விட்டு தன் இல்லம் திரும்புகிறுன்.)

(மறுநாள் கொள்ளைக் கூட்டத்து ஆட்களாகிய அம்மூவரும் பேசிக்கொள்கின்றனர்) ஒருவன் கூறினுன் என்னப்பா அந்தக் காத்தவராயன் மவ என்னத்துக் கும் மசிய மாட்டமிங்கிரு? அவளை வெளியே விட்டு வைக்கிறதே ஆபத்து இன்று ராவுக்கு போயி முடிவாக்கேட்டு இல்லேன்னு அவ வீட்டிலே வைத்து அவ வீட்டையும் சேர்த்து வெடிவச்சு தகர்த்துப் புடுவோம். மற்றவர்களும் ஆமாம் அதுதான் சரி என்று சம்மதித்தனர்.

அன்று இரவு 7-மணி அளவில் நம் சுந்தரியாகிய சுடரின் வீட்டிற்கு அம்முரடர்கள் வந்து அவளைக் கேட்க அவள் தனக்கு அதைப்பற்றியே ஒன்றும் தெரியவே தெரியாது என்று கூற அவர்கள் அவளை அவள் வீட்டின் உள்ளே விட்டு கதவை சாத்திப் பூட்டி வெடிவைத்து தகர்த்துவிட்டு ஓடிவிட்டனர். வெடிச் சத்தம் கேட்டு ஓடிவந்தான் முத்து, அங்கே அவன் கண்ட காட்சி சுடரின் வீடு இடிந்து தரை மட்டமாய்க் கிடந்தது. சுடர் தட்டுத் தடுமாறிக் கொண்டு எழுந் தாள். அவளுக்கு அருகில் தந்தப் பேழை ஒன்று

கிடந்தது. அதை எடுத்துக் கொண்டு அவள் திரும்பி முத்து நிற்பதைப் பார்த்து அத்தான் என்று அழைக்கிருள். அவள் ஒடிவர இருவரும் கட்டிப் பிடித்து தழுவிக் கொள்கின்றனர். இது என்ன பேழை சுடர். ம்..... இதுவா இது எனக் கருகில் கிடந்தது. ஆமாம் அம்மா எங்கே என்று இருவரும் தேட ஒரு உத்தரத்துக் கிடையில் அவள் தாய் சிக்கி பரிதாபமாய் இறந்து போயிருந்தாள். அதைப் பார்த்து பாவம் சுடர் கதறியே அழுது விட்டாள் அவளுக்கு ஆறுதல் சொல்லி அப் பெட்டியை முத்து திறந்து பார்த்து அதில் புதையல் குறிப்பு இருந்ததும் அதைப் போலீஸில் ஒப்படைத்து நடந்ததை அப்படியே ஒரு ரிப்போட் எழுதிக் கொடுத்தான் முத்து. அதே நேரத்தில் ஒரு போலீஸ்காரர் குடிபோதையில் இம் மூவரும் உளறிக் கொண்டு திரிந்ததாக அவர்களை தள்ளிக்கொண்டு காவல் நிலையத்திற்குள் நுழைந்தார். அவர்களைப் பார்த்த முத்து சார் இவர்கள் தான் அந்த முரடர்கள் என்று கூறி அடையாளம் காண்பிக்க அந்த அதிகாரி அவர்களை லாக்கப்பில் வைத்து முத்துவை வெளியே போக அனுமதித்தார். பிறகு அடுத்த நாள் அந்தப் புதயல் குறிப்பில் உள்ளபடி அந்த இடத்தில் சென்று போலீஸ் அதிகாரிகளும், முத்துவும், புதயலை எடுத்து உரியவர்களிடம் ஒப்படைத்தார்கள். பிறகு முத்துவும் சுடரும், நகமும் சதையும் போல, கண்ணும் இமையும் போல, விளக்கும் ஒளியும் போல, முத்துவும் சுடரும் முத்துச்சுடராய் இல்லற வாழ்க்கையை இன்பத்துடன் நடத்தினர் என்று வாசகர்களுக்கு சொல்லவும் வேண்டுமோ!

—— ——

# அன்றொருநாள்?

நான் ஒரு நாள் கல்லூரியை மாலை 4-30 மணிக்கு முடித்து எப்பொழுதும் ஊருக்குச் செல்லும் பஸ்தான் இன்றும் வரும் என்று கவனித்துக்கொண்டும் கால்கடுக்க நின்று கொண்டும் இருந்தேன். ஆனால் நான் அங்கு கண்ட காட்சி பெரும் அதிர்ச்சியைத் தந்தது. என்னவென்று கேட்கிறீர்களா? எப்பொழுதும் வரும் வண்டியை ஒரு பெரிய பயங்கரக்காரர்களின் கைவசம் சிக்கித் தவித்ததாகவும் அதிலே திருடி வந்த பொருள்களை எல்லாம் கடத்திக் கொண்டும் அதிகப்படியான சாராய பாட்டில்களையும் வைத்துக் கொண்டும் சென்றதாகவும் அதிலே என் ஆருயிர் நண்பன் திரு மோகன்தான் தலைவனாக இருந்திருக்கிறான் என்ற செய்தியை கேட்டபோது எனது உயிரே போய் விடுகிறமாதிரி இருக்கிறது சேச்சே! திருடன், பயங்கரக் கொள்ளைச்காரன் என்று பலராலும் இகழ்ந்து பேசப்படுகின்ற மோகனா எனது நண்பன் இல்லவே இல்லை. அவன் என்னை வாட்டி வதைக்கும் பேய். இன்று முதல் நான் அவன் முகத்திலே விழிக்கக் கூடாது. அவனே வந்து என்னைப் பார்த்தாலும் பேசக்கூடாது. இது உறுதி. சரி இருட்டிக் கொண்டே போகிறது. நடந்தே போகலாம் அம்மா தேடுவார்கள் என்று எண்ணி சுமார் 2 மைல் தூரத்தைக் கடந்திருப்பான் அப்பொழுது திடீர் என்று கதிரவனின் ஒளியைப் போல் ஒளித்தது ஒரு நான்கு சக்கரக் காரின் இரு லைட்டுகள்; திரும்பிப் பார்க்கிறான் தமிழ் மணி. இது என்ன அதிசயமாக இருக்கிறது


இந்த ரோட்டில் 7-30 மணிக்கு மேல் பஸ்ஸோ, காரோ வண்டிவாகனமோ செல்லாது இன்று என்ன அதிசயமாய் இருக்கிறது என்று வியந்த வண்ணம் வண்டியை நிறுத்தி தானும் சென்று தனது ஊரில் இறங்கிக் கொள்ளலாமென்று நினைத்து வண்டியை நிறுத்துகின்றான் தமிழ்மணி. வண்டி நிற்கிறது. வண்டியில்......

ஒரு அழகான பெண்ணும் அவளது காரோட்டியும் இருந்தனர். டிரைவர் தமிழ்மணியைப் பார்த்து எனப்பா என்ன திமிர்ரிருந்தா நீ இப்படி ஒரு பொண்ணு போற வண்டியைப் பார்த்து நிறுத்துவே சரிவிலகப்பா என்று புறப்பட ஆரம்பித்தான். டிரைவர் நிறுத்து அவர் பாவம் எங்கு செல்ல வேண்டும் என்று கேட்போம் என்று அந்தப்பெண் கேட்டாள். அந்தக் குரலில் தான் எத்தனை இனிமை எத்துணை சக்தி. உடனே தமிழ்மணி நான் அடுத்த ஊரான கோட்டையூரை அடைய வேண்டும். என்ன கோட்டையூரா அடைய வேண்டும்? நாங்களும் அங்கேதான் போகிறோம் வாருங்கள் ஏறிக்கொள்ளுங்கள் என்று காரின் கதவைத் திறந்தாள் அந்த பெண். சிறிது நேரத்தில் கார் புறப்பட தமிழ்மணி நீங்கள் கோட்டையூரில் எங்கு செல்கிறீர்கள்? நான் இப்பொழுதுதான் இங்கு வருகிறேன் முன்பு ஸிலோனில் இருந்தேன், உங்களுக்குத் தெரியுமா மணியாத்தானை? எந்த மணியைச் சொல்கிறீர்கள்? எங்கள் அத்தை சுந்தரவல்லியின் மகன். என்ன சுந்தரவல்லியின் மகனா? சுமதி என்னைத் தெரியவில்லை? நான் தான் உன் மணியத்தான். என் பெயர்

இப்பொழுது தமிழ்மணி. அத்தான் அத்தான் என்று சொல்லிக்கொண்டே வந்தாள் சுமதி. அதற்கு வீடு வந்ததும் பணத்தை வண்டியோட்டியிடம் கொடுத்து விட்டு உள்ளே சென்றனர். அத்தை என்று சுமதி அழைக்க அந்த அம்மாள் யார் சுமதியா? வாம்மா இப்பொழுதாவது! உனக்காவது! வீடு தெரிந்ததா? அண்ணனல்லாம் சுகம்தானே? என்று அவள் வினவ ஐயோ! அத்தை நான் சொல்வேன் அப்பா இறந்து விட்டார் என்று சொன்னுள். ஐயோ! அண்ணு நீயும் போய் விட்டாயா? நான் என்ன செய்வேன் அண்ணு என்று கதறி கதறி அழுதாள் சுந்தரவல்லி. தமிழ்மணிக்கு இது இரண்டாவது பேரிடி. ஒன்று உயிருக்குயிரான நண்பன் கொள்ளைக் கூட்டத் தலைவன் மற்ருென்று தன் தாய்மாமன் மரணம். அவன் என்னசெய்வான் பாவம்.

சுமதியும் அத்தை சுந்தரவள்ளியுடன் அவர்கள் வீட்டிலேயே தங்கி தன் தகப்பனுர் இறந்த துக்கம் தெரியாமல் வாழ்ந்து வந்தாள்.

பல நாள் கழிந்தன. ஒருவரையொருவர் புரிந்து கொண்ட தமிழ்மணிக்கும், சுமதிக்கும், நல்ல தொரு நாளிலே திருமணம் இனிதாய் முடிந்தது.



★ விரைவில் எதிர்பாருங்கள்!

★ எங்கள் அடுத்த

★ வெளியீடு?

"தியாக உள்ளம்"

"பாசத்தின் விளைவு"

"முத்துவின் முத்தம்"

"மீனு என் காதலி"

---


# பாரதி நிலையம்

அரிமளம், :: திருச்சி ஜில்லா.

★ விரைவில் எதிர்பாருங்கள் !

★ எங்கள் அடுத்த

★ வெளியீடு

"தியாக உள்ளம்"

"பாசத்தின் விளைவு"

"முத்துவின் முத்தம்"

"மீனு என் காதலி"

---


பாரதி நிலையம்

அரிமளம், : : திருச்சி ஜில்லா.

ஷண்முகா பிரஸ், புதுக்கோட்டை.